வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 5569/ஆ5/2025, நாள்.10/11/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு வாரம் (நவம்பர் 15 முதல் 22 வரை) அனுசரிக்கப்படுகிறது – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை நிலை (1டி) எண். 83, பள்ளிக் கல்வித் துறை நாள். 17.06.2024
2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.071450/எம்2/இ1/2025, நாள். 06/11/2025

•••••

பார்வை 1-ல் காணும் அரசாணையில் பத்தி 6ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" It is mandatory for all schools to observe a child abuse prevention week (November 15 – November 22) annually through awareness program for all members of the school body and compliance report with supporting documentation should be sent to the school education department".

பார்வை 2ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைத்தடுப்பு மற்றும் விழிப்புணர்வு வாரத்தில் (நவம்பர் 15 முதல் 22 வரை) அனைத்து வகை பள்ளிகளில் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>விழிப்புணர்வு வாரத்தில் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.</u>

1. பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஏதேனும் ஒரு குழு பொறுப்பு ஆசிரியர் (House Head Teacher) "மாணவர் மனசு" திட்டம் சார்ந்து விளக்க உரை காலை வணக்கக் கூட்டத்தில் இடம் பெற வேண்டும்.
2. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு (Student Safeguarding Advisory Committee) பள்ளி அளவிலான குழுவில் பின்வருபவர்கள் இடம் பெற்றுள்ளனர்.
   - தலைமையாசிரியர்
   - ஆசிரியர்கள் – 2
   - பெற்றோர் ஆசிரியர் கழகம் / பெற்றோர் உறுப்பினர் – 2
   - பள்ளி மேலாண்மை குழு பிரதிநிதி – 1
   - ஆசிரியரல்லா பணியாளர் – 1
   - வெளி நபர் (தேவை எனில் ) – 1

இக்குழு விழிப்புணர்வு வாரத்தில் (நவம்பர் 15 முதல் 22 வரை) ஏதேனும் ஒரு நாள். பெற்றோர்களின் வசதிக்கேற்ப கூட்டத்தினை நடத்துதல் வேண்டும். "மாணவர் மனசு" பெட்டியில் பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் புகார்களை இக்கூட்டத்தில் விவாதித்ததையும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட உரிய நடவடிக்கை பற்றிய அறிக்கையினை மாவட்ட கல்வி அலுவலருக்கு தலைமையாசிரியர்கள் அனுப்பிட வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி) பள்ளி தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையினை தொகுத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சமர்பித்தல் வேண்டும்.

3. பதிவேட்டில் உரிய விவரங்களை பதிந்து பின்வரும் படிவத்தில் அவ்வப்போது அறிக்கை மாவட்டக கல்வி அலுவலருக்கு அனுப்பிட வேண்டும். மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி) அதனை தொகுத்து இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு**
**(மாணவர் மனசு பெட்டிகள் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகள் விவரம்)**

பள்ளியின் பெயர் –

| வ. எண். | நாள். | திறக்கப்பட்ட நேரம் | பெறப்பட்ட மனுக்கள் எண்ணிக்கை | கோரிக்கை விவரம் | எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(குறிப்பு – மேற்காண் விவரங்கள் 14417 எண்ணிலிருந்து பெறப்படும் புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரமும் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.)

4. மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு பள்ளியில் பாலியல் புகார் சார்ந்து ஏதேனும் தகவல் பெறப்படின் அதனை உடனடியாக 14417, 1098 ஆகிய எண்ணை தொடர்பு கொண்டு தகவல்களை அளித்தல் வேண்டும்.
5. மாணவர்களிடையே குழந்தைகள் உதவி மையம் எண். 1098 மற்றும் 14417 ஆகிய எண்கள் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.
6. இணையதள பாதுகாப்பு – மாணவர்கள் இணையதளத்தில் உள்ள தகவல்களை பாதுகாப்பாக எவ்வாறு கையாளுவது மற்றும் இணையதள பாலியல் வன்முறைகளை தவிர்ப்பது எவ்வாறு என்பது சார்ந்து மகிழ் முற்றம் செயல்பாடாக குழு வாரியாக விவாதம் நடத்தி குழுத் தலைவர்கள் கருத்து கண்காட்சி வகுப்பறையில் காட்சிப்படுத்துதல்.

7. அகல் விளக்கு செயல்பாட்டிற்கான அறிக்கையும் சமர்பித்தல் வேண்டும்.

பள்ளித் தகவல் பலகையிலும் / வகுப்பறைகளிலும் பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண். 14417 மற்றும் 1098 குழந்தைகளுக்கான அவசர உதவி எண்ணினை குறித்திடவும் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் சார்ந்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் விவரங்களை 06.12.2025-க்குள் தொகுத்து அனுப்ப மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google spreadsheet-னை பூர்த்தி செய்திட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -

1. படிவங்கள்
2. பார்வை 2-ன் கடித நகல்
3. சுவரொட்டிகள் (Posters)
4. Google Spreadsheet

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவல மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து வகை பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்.

1. சென்னை -6, பள்ளிக் கல்வி இயக்குநர்
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.

FORM – I

STUDENTS SAFE GUARDING ADVISORY COMMITTEE (SSAC)

| S. No. | Name of the School | Category Govt Primary / Middle / High / Hr. Sec School | SSAC Reconstituted | | No. of SSAC meetings conducted |
|---|---|---|---|---|---|
| | | | Yes / No | Date | June 2025 – Oct 2025 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |

FORM – II

TRAINING ON POCSO ACT AWARNESS DETAILS

| S. No. | Name of the School | Category Govt Primary / Middle / High / Hr. Sec School | June 2025 – Oct 2025 Annual Orientation Training (No. of Participants) | |
|---|---|---|---|---|
| | | | Teacher | Other Staff |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |